மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 260/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கலா | நாள் | 23.11.2022 |
| கணவர் பெயர் | கணேசன் | | |

2 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

11) 10.04.1990 ம் தேதியில் சின்னம்மாள் ச.எண்.93/1A ல் உள்ள 1 ஏக்கர் நிலத்தை பொறுத்து செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதாக நான் கூறியுள்ள நிலையில் மேற்படி செட்டில்மெண்ட் யாருக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால், பரஞ்ஜோதிக்கு எழுதி வைக்கப்பட்டது.

12) மேற்படி நிலத்தில் தற்போது பரஞ்ஜோதிதான் அனுபவத்தில் உள்ளாரா என்றால், இல்லை. மேற்படி நிலத்தை பரஞ்ஜோதி ராஜா என்பவருக்கு விற்றுவிட்டார். எந்த வருடத்தில், எவ்வளவு தொகைக்கு விற்றார் என்று எனக்கு சரியாக தெரியாது. மேற்படி ராஜாவுக்கு விற்ற பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்திடவில்லை. மேற்படி விற்பனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது.

13) கமலா சுவாதீனத்தில் உள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் எந்த சர்வே எண்ணில் கமலா சுவாதீனத்தில் உள்ளார் என்றால், சர்வே எண் எனக்கு சரியாக தெரியாது. கமலாவுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் நிலத்தை கமலா, நல்லதம்பி என்பவருக்கு விற்றுவிட்டார்.

14) தற்போது அந்த சொத்தில் நல்லதம்பி என்பவர்தான் சுவாதீனத்தில் உள்ளாரா? என்றால், ஆமாம். சின்னம்மாள் எனக்கு ஒரு ஏக்கர் நிலத்தை எழுதி கொடுத்ததாக சொல்லும் நிலையில் எந்த தேதியில் எழுதிக்கொடுத்தார் என்றால், தேதி சரியாக நினைவில்லை. அது என்ன பத்திரம் என்றால், தானசெட்டில்மெண்ட் பத்திரம். மேற்படி சின்னம்மாளை அவரது இறுதிகாலம் வரை மேற்படி பரஞ்ஜோதிதான் பராமரித்து அவர் இறந்த பிறகு அவருக்கு ஈமச்சடங்குகளை செய்தார் என்றால், சரியல்ல. சின்னம்மாள் இறுதிவரை தனியாகத்தான் இருந்தார். சின்னம்மாள் எந்த வயதில் இறந்தார் என எனக்கு சரியாக நினைவில்லை.

15) அவ்வாறு சின்னம்மாள் இறுதிவரை தனியாக வசித்து, தனியாகவே இருந்து இறந்தார் என்ற சங்கதியை என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். சின்னம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஒரு ஏக்கர் நிலத்தை மேற்படி சின்னம்மாள் இறக்கும்வரை எனக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்றாலும், மேற்படி சின்னம்மாளிடம்தான் அந்த ஒரு ஏக்கர் நிலத்தின் சுவாதீனம் இருந்தது என்றாலும், சரியல்ல. மேற்படி சின்னம்மாள் குழந்தை பையன் என்பவருக்கு மேற்படி என் பெயரில் எழுதிக்கொடுத்த ஒரு ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு விட்டிருந்தார். மேற்படி சின்னம்மாள் உயிருடன் இருக்கும்போதே குழந்தைபையனிடம் அவரது குத்தகை தொகையை கொடுத்துவிட்டு ஒரு ஏக்கர் நிலத்தை மீட்டு அதில் நான் விவசாயம் செய்து வந்தேன்.

16) அவ்வாறு சின்னம்மாள் உயிருடன் இருக்கும்போதே குழந்தைபையனிடம் அவரது குத்தகை தொகையை கொடுத்துவிட்டு ஒரு ஏக்கர் நிலத்தை மீட்டு அதில் நான் விவசாயம் செய்து வந்தேன் என்ற சங்கதியை நான் என் வழக்குரையிலோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எதுவும் சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

17) எந்த வருடத்தில் இருந்து குழந்தைபையன் மேற்படி ஒரு ஏக்கர் நிலத்தை குத்தகை பெற்றார் என்றால், என் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதுவதற்கு முன்பிருந்தே குழந்தை பையன் குத்தகை பெற்ற நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். என் பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதியதற்கு பின்னிட்டு 2, 3 மாதங்கள் கழித்து மேற்படி குழந்தை பையனுக்கு குத்தகை தொகை கொடுத்து சுவாதீனம் பெற்றுக்கொண்டேன்.

18) மேற்படி குழந்தை பையனிடமிருந்து நான் என் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்ட பின்பு 2, 3 மாதங்களில் அவரிடமிருந்து சுவாதீனத்தை மீட்டுக்கொண்டேன் என்ற சங்கதியை என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், எனக்கு சரியாக நினைவில்லை, ஆனால் பத்திரத்திலேயே எழுதப்பட்டுள்ளது.

19) என் பெயரில் 17.03.1994 ம் தேதியில் சின்னம்மாளால் எழுதிவைக்கப்பட்ட மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம், நான் சின்னம்மாளை பராமரிக்காமல் இருந்துள்ளதால், அவரது ஜீவனத்திற்கு தேவைப்படுவதாலும், எனக்கு சுவாதீனம் கொடுக்கப்படாத நிலையிலும், அதே சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 11.08.1995 ம் தேதியில் பதிவு செய்த பத்திரத்தின் மூலம் சின்னம்மாளால் ரத்து செய்யப்பட்டது என்றும், மேற்படி சங்கதி எனக்கு தெரியும் என்றால், சரியல்ல. என் பாட்டி சின்னம்மாள் மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை என் பெயரில் எழுதும்போதே எக்காலத்திலும் மேற்படி செட்டில்மெண்ட் ரத்து செய்ய முடியாது என்ற நிபந்தனையுடன் தான் எழுதியுள்ளார்.

20) நான் சொல்வது தவறானது என்றாலும், பத்திரத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்து பத்திரங்களும் பொதுவாக காண்பிக்கப்படும் நிபந்தனைகள்தான் என்றாலும், என் பெயரில் எழுதிக்கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி எழுதிக்கொடுத்தவரால் ரத்து செய்யப்பட்டு விட்டது என்றாலும், சரியல்ல. இதுவரை நான்தான் நிலத்தின் சுவாதீனத்தில் உள்ளேன். பட்டா என் பெயரில்தான் உள்ளது. நான்தான் பயிர்கடன் பெற்றுள்ளேன். எனவே சொத்து எனக்கு தான் சொந்தம். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால், சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.